# "சமஸ்கிருதம் இணைப்பு மொழியா?"

ந. இராமநாதன் எம்.ஏ., பி.எல்.,

திராவிடர் கழக வெளியீடு

# "சமஸ்கிருதம் இணைப்பு மொழியா?"

## பொள்ளாச்சியாருககு ஒரு மறுப்பு!

ந. இராமநாதன் எம்.ஏ., பி.எல்.,

திராவிடர் கழக வெளியீடு
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை –600 00 7.

முதற் பதிப்பு – 1987

இரண்டாம் பதிப்பு – 1999

© பதிப்புரிமை பெற்றது

நன்கொடை (குறைந்த அளவு) ரூ. 10/–

அச்சுக் கோர்ப்பு

பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்

அச்சிட்டோர்

'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,

வேப்பேரி, சென்னை –600 00 7.

# "சமஸ்கிருதம் இணைப்பு மொழியா?"

பொள்ளாச்சி மகாலிங்கம் என்பார் இந்திய ஒருமைப்பாடு வளரத் தம்முடைய யோசனைகளாக எழுதிய கட்டுரையொன்றை 1986- டிசம்பர் திங்கள் 'சக்தி' இதழில் யாவரும் காணலாம். இந்தியத் துணைக்கண்டம் இன்றுள்ள நிலையில், ஒருமைப்பாட்டை எண்ணும் எவரும் ஒருமைப்பாட்டுக்குப் பொருத்தமான யோசனைகளைக் கூறினால் அவற்றைப்பற்றி எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டுள்ளனர். இந்திய ஒருமைப்பாடு என்பது மட்டுமன்று; உலக ஒருமைப்பாட்டையே பேசலாம்; அல்லது எழுதலாம். ஆனால், ஒருமைப்பாட்டுக்குக் கூறும் வழிமுறைகள் ஒருமைப்பாட்டுக்கு உகந்தவையாகவும், உண்மைகளோடு பொருந்தியவையாகவும் நடைமுறைப்படுத்துதற்கு ஏற்றவையாகவும் இருக்கவேண்டும். பொள்ளாச்சியாரின் யோசனைகள், . ஒருமைப் பாட்டுக்கு உகந்தவையும் அல்ல; உண்மைகளோடு பொருந்தியவையும் அல்ல; எல்லாவற்றையும் விட நடைமுறைப் படுத்துதற்கு ஏற்றவையும் அல்ல.

இந்தியா என்பது ஒரு நாடன்று. தற்போதுள்ள இந்தியப் பகுதிகளைச் சிறுகச் சிறுக ஒவ்வொன்றாகப் பிடித்துத் தம்முடைய ஆட்சியில் வைத்துக்கொண்ட ஆங்கிலேயர்கள் தங்களுடைய ஆளுகைக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொண்ட ஒரு செயற்கை அமைப்புத்தான் இன்றைய இந்தியா. ஒரு நாடு என்பதற்கு முதல் அடையாளமாக அழுத்தம் திருத்தமாக விளங்குவது மொழியாகும்.

ஒரு மொழியால் ஓரினமாம் - அவ்
வோரினமே ஒரு நாடாம்

ஒரு நாடின்னொரு நாட்டைப் - போய்
ஒடுக்குதல் ஒப்பாய் வா! வா! வா!

-என்று புரட்சிக் கவிஞர் உரிமை வாழ்வைப் பாடியுள்ளமையாலும், இன்றுள்ள உலக நடைமுறைகளாலும் நன்குணரலாம். மொழியென்பது மனிதர்களை ஒருவரோடு ஒருவர் நெருக்கமுற இணைக்கும் கருவியாக விளங்குகின்றது. அது மட்டுமன்று. மொழியானது அதனைப் பேசும் மக்களின் வாழ்வோடு பிறந்து அவர்கள் வாழ்வின் வரலாற்றையும்

வளத்தையும் முற்றாக விளக்கும் முதன்மை இடத்தையும் பெற்றிருக்கின்றது.

அந்த வகையில் இந்தியா என்பது பல மொழிகளைக் கொண்டு விளங்கும் பல நாடுகளின் கூட்டமைப்பாக இருக்கின்றது.

## ஆதிக்கம் செலுத்துதல் - அவமானச் சின்னம்

இப்படிக் கூட்டமைப்பாக விளங்கும் இந்திய நாட்டுக் கூட்டமைப்பு வலுப்பெற்று உலகம் வியக்க விளங்கவேண்டுமானால், அந்தக் கூட்டமைப்பு எப்படியிருக்க வேண்டும்? அது சுண்ணாம்பும், மஞ்சளும் கலந்த கலவை போல இருக்கக்கூடாது. சுண்ணாம்பும் மஞ்சளும் கூடினால் இரண்டின் இயல்பும் கெட்டுச் சிவந்த தோற்றத்தை அடையும். கூட்டமைப்பில் உள்ள நாடுகள் ஒன்று ஒன்றன் மீது ஆதிக்கம் செலுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சிகளால் இரண்டின் இயல்புகளும் கெட்டுச் சீரழிந்து உலகின் முன் ஓர் அவமானச் சின்னமாக விளங்கும். இத்தகைய கூட்டுக் கூடாது. பின்னர் எவ்வாறிருந்தால் கூட்டமைப்பு வலிவும் பொலிவும் பெற்று விளங்கும் என்றால், அது பல வகை வண்ணமும் பல வகை மணமும் கொண்ட மலர்களால் அழகுற இணைக்கப்பட்ட மாலைபோல விளங்க வேண்டும். இப்படி அமைந்துள்ள மாலையில் உள்ள மலர்கள் ஒன்றினோடு ஒன்று சேருவதால் தன் தன் தன்மைகளை இழந்துவிடுவதில்லை. அந்தந்த மலர்களும் அவை அவைகட்குரிய நிறமும், மணமும் கொண்டு மற்ற மலர்களோடு இணைந்து மாலையாக அணி செய்கின்றன. மாலையில் உள்ள மலர்கள் போலக் கூட்டமைப்பில் உள்ள நாடுகள் சிறிதானாலும், பெரிதானாலும் ஒன்றின் உரிமையை மற்றொன்று மதிக்கவேண்டும். ஒவ்வொரு நாடும் தன் தன் இடத்தில் கிடைக்கும் இயற்கை வசதிகளைக் கொண்டு முன்னேற வாய்ப்பும் வசதிகளும் உள்ளதாக அமைய வேண்டும்.

கூட்டமைப்பாக இயற்கையில் அமைந்துள்ள இந்திய நாட்டுக்கு அமைந்த அரசியல் சட்டம் மேலே நாம் விரித்துக்காட்டியுள்ள இயல்புகளுக்கு ஏற்றதாக அமையவில்லை. அது மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த கலவையாக விளங்குகின்றது. இப்படி இந்திய அரசியல் சட்டம் அமைந்துள்ளது என்பதற்கு அரசியல் சட்டத்தை அமல்படுத்திய 37 ஆண்டுகளில் 52 முறை திருத்தம் பெற்றுள்ள நிலைமையே தலைசிறந்த சான்றாக அமைகின்றது. இன்னும் நடைமுறைக்குப் பொருத்தமில்லாத பகுதிகள் பல இருக்கின்றன.

இந்தச் சமயத்தில் இந்திய அரசியல் சட்டம் பற்றிப் பர்னாட்ஷா கூறிய கருத்தை நினைவு செய்துகொள்ளுதல் பொருந்தும் என்று எண்ணுகின்றேன். பர்னாட்ஷாவிடம் ஒருவர் பின்வருமாறு கேட்டார்:''

அய்ரோப்பா முழுவதையும் விட அதிகமான மக்கள் தொகையையும் பலவித வேறுபாடுகளையும் கொண்ட தங்கள் தேசத்துக்கு ஓர் அரசியல் சட்டத்தை இந்தியத் தலைவர்கள் தயாரித்து விட்டனர். அய்ரோப்பாவில் காண முடியாத இராசதந்திரத் திறமை இந்தியாவில் இருக்கின்றது என்று தீர்மானிக்கலாமா?''

அதற்கு அவர் கூறிய விடை:

''அவ்விதம் தீர்மானிக்க முடியாது. நடைமுறைப் படுத்த இயலாத கற்பனை உலக அரசியல் சட்டத்தைச் சாதாரணக் கற்பனைப் பித்தன்கூடத் தயாரித்து விடுவான். சுவர்க்க சாம்ராச்சியத்துக்கோ, நிலவுலக சாம்ராச்சியத்துக்கோ எதற்கு வேண்டுமானாலும் அரசியல் சட்டத்தை அவன் தயாரித்து விடுவான். ஆகவே முக்கியச் செய்தி அதுவன்று''.

(-'திராவிட நாடு' 5-2-1950)

''கற்பனையைப் போல மனிதனுக்குக் கெடுதி வேறொன்றுமில்லை. இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் கொஞ்சநேரம் தங்கிக் கொள்ளுவதால் அவற்றின் கூடும் ஒன்றாகிவிட முடியாது.

-வி. ச. காண்டேகர்

-இப்படியான இந்திய அரசியல் ஆட்சி மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்து, நடுவண் அரசு திணறிக் கொண்டிருக்கின்றது. அதனை நடைமுறைப் படுத்துவதில் முன்னர் இருந்த பிரதமர்கள் இவ்வளவு முனைப்பாக இல்லை. இப்போதுள்ள பிரதமரும், இந்திக்காரர்களும், இந்தியை எங்கும் - எதிலும் ஆட்சிமொழியாகப் புகுத்தச் சட்டத்தின் துணைகொண்டு பெருமுயற்சி எடுத்துள்ளனர். இதற்குத் தமிழகத்தில் 1938-இல் பெரிய எதிர்ப்பு எழுந்ததுபோல - இப்போதும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இதற்குத் தீர்வாகச் சமஸ்கிருத மொழியை ஆட்சி மொழியாக்கி - இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கலாமென்பது பொள்ளாச்சியாரின் புத்தம் புதிய யோசனை. இதற்காக அவர் எழுத்துகளை முறையாகப் பார்ப்போம்.

''பழம்பெரும் நாடான நமது தேசத்தின் பண்டைச் சிறப்பை, புராதன காலத்தின் புகழை, எதிலே நாம் பார்க்கமுடியும்? சமஸ்கிருத மொழிதான் அதற்குச் சரியான வழி''.

(-'சக்தி' பக்கம் 6)

## இந்தியா ஒரு நாடானது எப்போதய்யா?

''பழம்பெரும் நாடான நமது தேசம்'' என்கின்றாரே! இவர் குறிக்கும் நாடான தேசம் எது? 'நாடான தேசம்' என்று இவர் குறிப்பது - தற்போதுள்ள இந்தியாதான் என்றால் - இந்தியா ஒரு நாடுபோல ஆனது எப்போது? ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் - இந்தியா என்ற பெயரில் 'தேசம்' உண்டா? இந்தியா என்ற பெயரில் நாடு உண்டா? இல்லையே. அப்படி இந்தப் பெயரில் இல்லாமல் - தனித்தனி மொழி வழங்கும் இடங்களாக, தனித்தனியான பல ஆட்சி முறைகளை உடையதாக, இப்போதுள்ள இந்திய நிலப்பரப்பு இருந்தது - அந்த நிலப்பரப்பு முழுமையிலும் எந்த நாட்டிலாவது சமஸ்கிருதம் பேச்சு மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ இருந்த துண்டா? இல்லையே!

இப்போதுள்ள இந்தியப் பரப்பு முழுமையிலும் புராதனப் புகழை ஆராய்ந்தால், அது தமிழர் அல்லது திராவிடர் புகழாகத்தான் இருக்கும். ஏனென்றால், இந்திய நிலப்பரப்பு முழுமையிலும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் பரவி இருந்தமைக்குரிய சான்றுகள், புதைபொருள் ஆய்வுகள் வாயிலாகவும் மொழிகளின் முறையான ஆய்வுகளின் வாயிலாகவும் காணக் கிடைக்கின்றன. சிந்துவெளி நாகரிகங்கள் பற்றிய அகழ்வாராய்ச்சிகள் பண்டைய தமிழ்-திராவிட நாகரிகங்களின் பழமைக்குச் சான்று பகர்கின்றன. இவைகளில் கூடக் கருத்து வேறுபாட்டைக் கூறுகின்றார்கள். ஆனால், மொழிகள் அடிப்படையில் காணப்படும உண்மைகள் யாராலும் மறைக்கவோ - மறுக்கவோ இயலாததாகவுள்ளன.

## டாக்டர் கால்டுவெலின் சான்றுகள்

இந்திய நாட்டு மொழிகளைப் பன்னெடுங்காலமாக ஆய்ந்துள்ள மொழியியலார் இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுவார்கள். விந்திய மலைக்குத் தெற்கில் வழங்கும் தமிழ் மொழியை முதன்மையாகவுடைய மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளும், சிறுபான்மையோரால் மலைகள் முதலான பல இடங்களில் பேசப்படும் திருந்தாமொழிகளும் திராவிட மொழியினம் என்று கூறுவர். விந்தியத்திற்கு வடக்கில் வழங்கும் மொழிகளை வடமொழி அல்லது சமஸ்கிருதம் வழியிலான இந்தோ-ஆரியமொழியினம் என்று கூறுவர். திராவிட மொழிகள் வடமொழியான சமஸ்கிருதத்திற்கு நேர்மாறு அடிப்படை இயல்புகளை உடையவை. இவை இரண்டு மொழிக

வேறு வேறானவை என்பதை டாக்டர் கால்டுவெல் திறம்பட ஆராய்ந்து நிறுவியுள்ளார். இவருக்குப் பின்னர் (Modern Linguists) என்று சொல்லப்படும் மொழியியலாளரும் கால்டுவெல் கருத்தையே வற்புறுத்தியுள்ளனர். இவர்கள் எல்லாம் இந்தியா என்று சொல்லப்படும் நாடுகள் முழுமையிலும் திராவிட மொழிகள் பரவி இருந்தமைக்குரிய சான்றுகளாகச் சமஸ்கிருதம் முதலான இந்தோ ஆரியமொழியினத்தைச் சேர்ந்த எல்லா மொழிகளிலும் திராவிட மொழிக் கூறுகள் கலந்திருப்பதை எடுத்துக் கூறியுள்ளனர்.

## வேதங்களிலும் திராவிடச் -சொல் களவு

திராவிடச் சொற்களாக இருபதுக்கும் மேற்பட்டவை வேதத்தில் உள்ளதாகவும் இன்றும் பல இடப் பெயர்கள் அம் மொழியில் இடம்பெற்றுள்ளன என்றும் கால்டுவெல் குறித்துள்ளார் என்று டாக்டர் அகத்தியலிங்கம் (தற்போது தஞ்சைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) தம்முடைய .உலகமொழிகளும் தமிழும். என்ற கட்டுரையில் குறித்துள்ளார். ரிக்வேதத்தில்கூடத் திராவிடச் சொற்கள் கலந்துள்ளன என்று டாக்டர் பர்ரோ குறிப்பிட்டுள்ளார் என்று மேலும் டாக்டர் அகத்தியலிங்கம் எடுத்துக்காட்டியுள்ளார். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாற்றில் தமிழ்மொழியானது சமஸ்கிருதம் - கிரேக்கம் - இலத்தீன்- ஆங்கிலம் முதலிய மொழிகளோடு தொடர்பு பெற்றுச் சொற்களைக் கொடுத்திருக்கின்றது என்று டாக்டர் அகத்தியலிங்கம் எழுதியுள்ளார். இந்திய நாட்டின் சமஸ்கிருதம் முதலான மொழிகளை ஆராய்ந்தால் தமிழ் அல்லது திராவிட மொழிகளின் பழமையும் சிறப்பும் தான் புலப்படும் என்பது நன்கு தெரிகின்றது.

## பொள்ளாச்சியாரின் உளறல் மொழிகள்

பேச்சு மொழியாகவோ ஆட்சி மொழியாகவோ இல்லாத சமஸ்கிருத மொழியில் காணப்படும் அயன்மொழியாளருக்குரிய புராதனச் சிறப்புக்கான அவற்றைத் தம்முடைய தலையில் சுமந்துகொண்டு பித்தம் தலைக்கேறி உளறிக் கொட்டும் பொள்ளாச்சியாரின் உளறல் மொழிகள் கட்டுரை முழுவதிலும் காணப்படுகின்றன. வடமொழிக்கு அவர் ஒரு புதிய விளக்கத்தைக் கூறுகின்றார்.

''வடல் மொழியாக வழங்கிப் பிறகு வடமொழி ஆயிற்றாம். வடல்மொழி என்பது வடு + அல் மொழி எனப் பிரிந்து நின்று குற்றமற்ற

மொழி என்பதைக் காட்டுமாம். மொழிக்குள்ள ஒலிக் குறைபாடுகளைப் போக்கிச் சரி செய்யப்பட்ட மொழி சமஸ்கிருதமாம். இந்த உண்மை தெரியாமல் இங்குள்ளோரும் பிறரும் வடக்கிலிருந்து வந்த மொழி -வடக்குக்கு உரிய மொழி என்ற கருத்தில் வடமொழி என்று சொல்லுகின்றார்களாம்.

பித்தம் அரைகுறையாக இல்லாமல் முழுமையாகப் பொள்ளாச்சியாரின் தலைக்கு ஏறிப் புலம்புகின்றார் என்பதற்கு அடுத்தும் ஒரு சான்று தந்துள்ளார்.

''இதனை ஆரிய பாஷை எனச் சிலர் பேசி வருகின்றனர். உண்மையில் சமஸ்கிருதம் தமிழனுடைய மொழி''.

**('சக்தி' பக்கம் -7)**

தமிழையோ -சமஸ்கிருதத்தையோ இவர் எழுதியுள்ள இக் காலம் வரையிலும் பயின்றவர்கள் எவருக்கும் இந்தக் கருத்துப் புலப்படவில்லை. அல்லது தமிழையும், சமஸ்கிருதத்தையும் இன்னும் உலகிலுள்ள பிற இன்றியமையாத மொழிகளையும் ஆராய்ந்து பல உண களைக் கூறும் மொழிநூல் வல்ல அறிஞர்களும் எடுத்துக்கூறாத உண்மை இவருக்குப் புரிந்துவிட்டதாகத் துணிந்து எழுதுகின்றார். இது இவருடைய அறியாமையோடு கூடிய மயக்கவுணர்வின் எல்லையைத்தான் காட்டுகின்றது. இவைகட்கான விடைகளைப் பின்னர் எழுதுகின்றேன். இடையில் ஓர் உண்மையை உங்கட்குச் சொல்லுகின்றேன்.

தமிழ் மாநில அரசும், இந்திய நடுவண் அரசும் இன்றுள்ள நிலையில், நாட்டில் யார் வேண்டுமானாலும் - எதை வேண்டுமானாலும் - எப்படி வேண்டுமானாலும் பேசலாம்; எழுதலாம்; செய்யலாம் என்று ழ்நிலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. அதற்குச் சரியான சான்றாகப் பொள்ளாச்சியாரின் புலம்பலைக் கூறலாம். இந்திய நடுவண் அரசில் பண்டித நேரு காலம் தொடங்கி, இந்திரா அம்மையார் காலம் யிலும், தமிழ் மாநிலத்தில் இராசாசி காலம் தொடங்கி, கலைஞர் ணாநிதி காலம் வரையிலும் நிகழாப் புதுமைகள் பல இன்று 986-87) தமிழகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. மொழி ஆய்வுத் துறையிலும் ஒரு புதுமையைக் காட்டவேண்டுமன்றோ? அதற்காகப் புறப்பட்டிருக்கின்றார் இந்தப் பித்தம் தலைக்கேறிய பொள்ளாச்சியார். தமிழ் மொழியின் இலக்கண, இலக்கிய அறிவோ, மொழியியல் அறிவோ

சிறிதும் இல்லாமல், உள்ளத்தின் திமிரையே உறுதுணையாகக் கொண்டு எழுதும் இவருடைய வெற்றுரைக்கு, பின்னர் யான் எழுதும் உரைகள் தக்க அமைதிகளாக அமையும் என்று எண்ணுகிறேன்.

மேலும் ஒரு புலம்பலைக் காண்போம்.

நமது வேத மந்திரங்கள், உபநிடதங்கள் சமஸ்கிருதத்தில் தான் உள்ளன. ஆகவே சமஸ்கிருதம் என்பது ஒரு மொழி மட்டுமல்ல. அது நமது கலாச்சாரத்தின் சின்னம்

('சக்தி' பக்கம் - 7)

## நாச்சியப்பருக்குத் தெரியுமா? இவரறிவாரா?

நமது வேத மந்திரங்கள், நமது கலாச்சாரம் என்று மார்தட்டிப் பேசுகின்றாரே! பழம் பெருமைபெற்ற கொங்கு நாட்டுப் பண்பட்ட தமிழ்க் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இந்தப் பெருமகனுக்கு வேத மந்திரங்கள் தெரியுமா? உபநிடதங்கள் தெரியுமா? இவரைப் பெற்று வளர்த்தாரே, அந்தப் பெருமகனாகிய நாச்சியப்பக் கவுண்டருக்குத்தான் தெரியுமா? அவரைப் பெற்றவருக்குத் தெரியுமா? அவர்களெல்லாம் வேதமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு, வேள்விகளையெல்லாம் செய்து கொண்டிருந்தார்களா? வேத மந்திரங்கள், உபநிடதங்கள் ஆகியவைமீது உரிமை கொண்டாட இப்போதுள்ள சட்டப்படி முடியுமா? அப்படி முடியும் என்றால், இவர் காலத்தில், நம்முடைய காலத்தில் வேத மந்திரங்களை முயன்று படித்துத் தேறிய எல்லாச் சாதியாரும் அர்ச்சகராகலாம் என்று டாக்டர் கலைஞர் காலத்தில் தமிழகச் சட்டமன்றத்தில் ஒருமனதாகச் செய்த முடிவை அது செல்லாதென்று இந்திய நாட்டு உச்ச நீதிமன்றம் முடக்கிப் போட்ட கண்கூடான உண்மை இந்த மனிதருக்குத் தெரியாதா? 1972-இல் என்று எண்ணுகிறேன். சூத்திரனுக்குச் சந்நியாசம் மேற்கொள்ள உரிமையில்லையென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியதே, இதுவும் தெரியாதா?

## வள்ளுவர் காட்டும் அறம் என்ன?

பண்டைய நிலைமை என்ன? மனுநீதிதானே தமிழகத்தில் வாழ்க்கைச் சட்டம்? தமிழகத்தில் திருவள்ளுவரால் உருவாக்கப்பட்ட உலகப் புகழ் பெற்ற திருக்குறள் என்னும் அறநூலுக்கு, உரை எழுதிய புகழ்பெற்ற

பரிமேலழகர் என்னும் உரையாசிரியர் அறம். என்ற சொல்லுக்கு உரையெழுதும் போது எப்படி எழுதியுள்ளார்? அறம் என்பது மனு முதலிய நூல்களுள் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் ஆம்.. என்று உரை எழுதினாரே! வள்ளுவரே அறத்தை விளக்கும்போது, அது ''மனத்தின் கண் மாசிலனாதல்'' என்று சொல்லியுள்ளார். அப்படியிருக்கவும், பரிமேலழகர் ஆரிய மனு நீதி நூலுள் சொல்லிய கருத்தை எடுத்து எழுதினாரே! அது அவர் செய்த குற்றமா? இல்லையே! அறம் என்பது வள்ளுவர் கருத்துப்படி 'மனத்துக்கண் மாசிலனாதல்' என்பது பரிமேலழகருக்கு நன்கு தெரியும். அப்படியிருக்கவும் எழுதிய காரணம் என்ன? அவர் காலத் தமிழக நிலை அப்படி. அதாவது ஆரிய மனுநீதி நூல் முறைதான் தமிழக மன்னர்கள் கைக்கொண்ட வாழ்க்கைச் சட்டம். ஆகவே பரிமேலழகர் அவ்வாறு உரை எழுதினார். அந்த மனுநீதி நூல் என்ன சொல்லுகின்றது? பார்ப்பனருக்கு மட்டுமே கல்வி பெறும் உரிமையை வழங்குகின்றது. வேதம் முதலிய கல்வியைப் பார்ப்பனரல்லாதவர் கற்றால் அவர்கள் நாக்கை அறுக்க வேண்டும் என்று சொல்லுகின்றது. காதால் கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் என்று சொல்லுகின்றது. இதோ ஒரு சான்று:

. மதுரையில் நாயக்க மன்னர் ஆண்ட காலத்தில் அரசாங்கச் செலவில் பத்தாயிரம் பார்ப்பன மாணவர்கள் வேதம் முதலிய உயர்கல்வியைப் பயின்றார்களாம். அவர்களில் ஒருவர் கூட மற்ற சாதியர் இல்லையென்று ராபர்ட்-தி-நோபிலி பாதிரியார் 22-11-1610-இல் கடிதம் எழுதியதாக மதுரை நாயக்கர் வரலாறு கூறுகின்றது. அவர் கடிதம் எழுதியுள்ள அக் காலத்தில் உயர் கல்வியாகக் கருதப்பட்ட வேதம் ஓதல் முதலிய கல்வி மற்றச் சாதியாருக்கு மறுக்கப்பட்டிருக்கின்றது என்று அந்தக் கடிதத்தில் தி - நோபிலி குறித்திருக்கின்றார் என்று நாயக்கர் வரலாறு கூறுகின்றது.

(History of Nayaks of Madurai By Sathianatha Aiyer. Page 257.)

-இன்றைய அரசியல் சட்டமும் மறைமுகமாக இதனையேதான் ஆதரிக்கின்றது. அதனால்தான் அனைவரும் அர்ச்சகராகும் சட்டம் முடக்கப்பட்டது. ''உண்மை இப்படி இருக்க, நமது வேதம் நமது சாத்திரம்'' என்று சமஸ்கிருத மொழியிலுள்ள வேதம் முதலிய சாத்திரங்களுக்கு உரிமை கொண்டாடப் பார்ப்பனரல்லாதவராகிய பொள்ளாச்சியாருக்கு உரிமை ஏது?

## ஆதிசங்கரர் தமிழரானாரே!

அடுத்து ஒரு புலம்பல்!

**ஆதிசங்கரர் தமிழர். எப்படி? இவர் காலத்தில் இவர் பிறந்து வளர்ந்த மலையாள நாட்டில், மலையாள மொழி இல்லை. தமிழ்தான் இருந்தது. தமிழ்தான் பேசினார். ஆகவே, இவர் தமிழர். அத்துவைத சித்தாந்தத்தையும் வேறு நூல்களையும் சமஸ்கிருதத்தில் எழுதினார்.**

(- *'சக்தி'* பக்கம் - 7)

ஆகவே அவர் சமஸ்கிருதத்தில் எழுதியுள்ள நூல்களெல்லாம் நமக்குரியன என்று கூறுகின்றார். இது எப்படியிருக்கின்றது? கொஞ்சம் சிந்திப்போம். உலகிலுள்ள பல நாட்டினர் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடியேறி, குடியுரிமை பெற்று வாழ்கின்றனர். அவர்கட்குப் பிள்ளைகள் பிறக்கின்றனர். அந்தப் பிள்ளைகளும், அவர்கள் குடியேறிய நாட்டு மொழிகளைப் பேசவும், எழுதவும் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் பெரியவர்களாகி, அந்நாட்டு மொழியிலேயே நூல்களும் எழுதி நல்ல புகழை அடைந்துவிடுகின்றார்கள்! அவர்களைத் தொன்றுதொட்டு அந்நாட்டில் வாழும் மக்களைப்போல எண்ணுவார்களா? எண்ணமாட்டார்கள். நம்நாட்டிலும் அய்ரோப்பியப் பாதிரிமார் பலர், பலகாலம் வாழ்ந்திருக்கின்றனர். தமிழில் நூல்களும் எழுதியுள்ளனர். அதுகொண்டு அவர்களைத் தமிழர் என்று சொல்லமுடியுமா? முடியாது. ஏன்?

எவ்வளவு காலம் வாழ்ந்தாலும், தமிழில் பயிற்சி பெற்றாலும் பேசுங்கள் என்று சொன்னால் தமிழர்களைப் போல் பேசவராது. கேட்டுக் கொள்கிறேன் என்று அவர்கள் சொன்னால் கேட்டுக் கொல்கின்றேன் என்று தான் சொல்லுவார்கள். மகாசனங்கலே என்றுதான் பேசுவார்கள். மலையாளிகள் தமிழ்நாட்டில் வந்து இருக்கின்றார்கள். அவர்கள் தமிழில் பேசினால் உடனே மலையாளிகள் என்பது தெரிந்துவிடும். சங்கரர் தமிழர் என்றால் தொன்றுதொட்டு வரும் தமிழ்ப்பண்புகள் அவரிடம் இருக்கவேண்டும். தொல்காப்பியம் முதலான நூல்வழிப் புலமையை அவர் பெற்றிருக்கவேண்டும் இவை ஒன்றும் இல்லை. தமிழ் மொழியிலும் எழுதவில்லை. சமஸ்கிருதத்தில் எழுதினார். சமஸ்கிருதம் தமிழுக்கு எதிரானது. இவரை எப்படித் தமிழரென்று கூறமுடியும்?

அவர் பார்ப்பனரல்லாத பெரும்பாலான மககளுக்கு எதிராகத் தாமெழுதிய பிரமசூத்திர உரையில் எழுதிப் பெருங்கேட்டைச் செய்துள்ளார் என்று விவேகானந்தர் கூறியதாகச் சாமி கைவல்யம் 26-2-1933 குடிஅரசி.ல் எழுதியுள்ளார்

**விவேகானந்தர் கருத்து வருமாறு:**

ஆதிசங்கராச்சாரியால், இந்து வேத<sub></sub>ம சீர்திருத்தப்பட்டபோது பிராமணர்களுக்கு மாத்திரம் அனுகூலமாயிற்று. மற்ற இந்திய மகாசனங்களுக்கோ அவர்கள் முன் பார்த்திராத விலங்குகளை உண்டாக்கிவிட்டது.

-விவேகானந்தர்

('குடிஅரசு' -26-2-1933)

**சாமி கைவல்யம் கூறுவதென்ன?**

விவேகானந்தர் கருத்து என்ன என்பதைச் சாமி கைவல்யம் பின்வருமாறு எழுதுகின்றார்:

**பார்ப்பனரியல்புகளைப் பாரீர்!**

''வேதத்தின் தத்துவங்கள் அடங்கிய நூலொன்றை வியாசர் செய்தார். அதற்கு வியாசர் சூத்திரம் என்பது பெயர். அந்த வியாச சூத்திரத்திற்குச் சங்கரர், மத்துவர், இராமாநுசர், திருநீலகண்ட சிவாச்சாரியார் போன்றவர்கள் விரிவுரைகள் எழுதியுள்ளனர். ஆதி சங்கரர் முதல் யாவரும் அவரவர் மத நோக்கத்திற்கு ஏற்ப எழுதினார்கள். சங்கரர் எழுதிய விரிவுரை நூலுக்குப் பிரம்ம சூத்திரம் என்பது பெயர்.

அந்தப் பிரம்ம சூத்திரத்தில் அபசூத்திராதிகரணம் என்ற ஒரு பிரிவு இருக்கின்றது. அதாவது சூத்திரனைப் புறக்கணித்த இடம் என்பது கருத்து. இந்த இடத்தில் மட்டும் எல்லா ஆச்சாரியார்களும் - சங்கரரைப் பின்பற்றி உரை எழுதியிருக்கின்றனர்.

சங்கரர் எப்படி உரை எழுதியுள்ளார்?

**சங்கரரின் உரைப் பித்தலாட்டம்**

அபசூத்திராதிகரணம் ஒழிந்த பகுதிகளுக்கு உரை எழுதும்பொழுது உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்டு, கடவுள் நிச்சயம்; ஆன்ம

நிச்சயம் என்ற செய்திகளை விரித்து எழுதியுள்ளார். சூத்திரனை விலக்கிய பகுதிக்கு உரை எழுதும்பொழுது, உபநிடதங்களை ஆதாரமாகக் கொள்ளவில்லை. ஏனென்றால் உபநிடதங்களில் சாதி தருமம் பற்றிய செய்திகள் இல்லை. ஸ்மிருதி நூல்களை அதாவது வடமொழியில் உள்ள மனு முதலிய நீதி நூல்களை ஆதாரமாகக் கொண்டு சூத்திரனுக்குச் சிரவணம் அதாவது ஓதல், அத்தியயனம் - அதாவது கேட்டல், அர்த்த சிந்தனம் - அதாவது பொருள்களை ஆராய்தல் மூன்றும் விலக்கப்பட்டிருக்கின்றன என்று எழுதியுள்ளார். இவர்தான் இப்படி எழுதினார் என்றால் மற்றப் பார்ப்பனர்கள் சங்கரரோடு மாறுபாடு கொண்டு, தம் தம் மதக் கருத்துப்படி உரை எழுதுகின்றவர்கள், இந்த இடத்தில் சங்கரரோடு மாறுபடவில்லை. சங்கரர் சொன்னதையே தாங்களும் ஆதரித்துச் சூத்திரர்களுக்கு மேற்கூறிய கல்விப் பகுதிகளை அறவே விலக்கி எழுதியுள்ளனர். முதன்முதலில் விரிவுரை செய்த சங்கரர்தான் இந்த அநியாயத்தைச் செய்கின்றார். இதனைத்தான் விவேகானந்தர் சங்கரருடைய விரிவுரை பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவும், மற்ற மகாசனங்களுக்குப் பெருங்கேடாகவும் முடிந்தது என்று சுட்டிக் கூறியுள்ளார். இதுதான் பார்ப்பனர் இயல்பாகும். இப்படிச் செய்த சங்கரரைத் தமிழனென்று வாய்கூசாமல் பேசியும், கைகூசாமல் எழுதியும் காட்டும் பொள்ளாச்சியாரை நாம் எப்படி உலகிற்கு அறிமுகப்படுத்துவது என்பது புரியவில்லை. இதனைப் படிக்கின்ற நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள் என்று உங்கள் முடிவுக்கு விட்டு விடுகின்றேன்.

பார்ப்பனர் இயல்பாகச் சங்கரர் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை, வடமொழி நூல்களில்கண்ட செய்தியைச் சாமி கைவல்யம் மேற்காட்டிய 'குடிஅரசி'ல் எழுதினார். இதே செய்தியை ஓதாமல், உலகியல் செய்திகள் அவ்வளவையும் ஒழிவில்லாமல், எல்லை காண முடியாத தம்முடைய பகுத்தறிவின் வன்மையால் கண்டுணர்ந்து, இடையறாமல் பேசியும் எழுதியும் வந்த நரைமுதிர் யாக்கை நடுங்காநாவின் உரை மூதாளராம் எமது தந்தை பெரியார் தம்முடைய 'குடி அரசி'ன் ஆசிரியர் உரையில் பின்வருமாறு எழுதுகின்றார். அதனையும் உங்கள் பார்வைக்கு வைக்கின்றேன்.

**(8-7-1933 - 'குடி அரசு' தலையங்கம்)**

''பார்ப்பனர்கள் தங்கள் சொந்தநலன்கருதி, ஒருவருக்கொருவர் எதிரியாகலாம். அவர்கள் பகைமை மாறுபாடுகளெல்லாம்

அவர்களளவில் இருக்குமே தவிரப் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்ற நிலை உருவானால், உடனே பார்ப்பனருக்குச் சாதகமாகவே செயல்படுவார்கள். இது பார்ப்பனரியல்பு''.

இக் கருத்துப்பட எழுதி விட்டுப் பெரியார் ஒரு நிகழ்ச்சியைக் காட்டுகின்றார் பாருங்கள்:

''உண்மையில் சத்தியமூர்த்திக்கும் கனம் ஆச்சாரியாருக்கும் ஒருவருக்கொருவர் தனிமையில் கண்டால் வெட்டிக் கொள்ளும்படியான ஆத்திரமும், குரோதமும் இருந்துவருவது யாவரும் அறிந்ததாகும்.

அதாவது சத்தியமூர்த்தியாருக்குக் கிடைக்கவேண்டிய மந்திரிப் பதவியைத் தோழர் ஆச்சாரியார் திடீரென்று திருச்சி டாக்டர் இராசனுக்குக் கொடுத்துவிட்டதால், அன்று முதல் இன்று வரை ஆச்சாரியாரை வைத வண்ணமாகவும், அவர் மீது எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த வண்ணமாகவும் இருந்து வருகின்றார். அப்படிப்பட்டவர் ஆச்சாரியாரின் கட்டாய இந்தி நுழைப்பும் - எதிர்ப்பும், பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் செயல்கள் என்று தெரிந்தவுடன் இந்தியை எதிர்ப்பவர்களை ஆறு மாதமும் 3 வருஷமும் தண்டித்தால் போதும் என்று ஆச்சாரியார் சொன்னால், தோழர் சத்தியமூர்த்தி இந்தியை எதிர்ப்பவர்களை ஆயுள் பரியந்தம் தண்டிக்கவேண்டும் அல்லது தலையை வெட்டவேண்டும் (தூக்கில் போடவேண்டும்) என்று பகிரங்கமாக ஒரு பொதுமேடையில் பேசி, ஆச்சாரியாருக்கு உதவி செய்கின்றார்''.

(''குடி அரசு'' - தலையங்கம் -8-7-1938)

**உலகியலில் அய்யா கண்டவை**

சங்கரர் காலத்தில் பார்ப்பனர் செய்த அட்டூழியத்தை, அவர்கள் வடமொழியில் எழுதிய நூல்கள் கொண்டே, சாமி கைவல்யம் எழுதிக் காட்டினார். அவர் எழுதிக் காட்டிய அதே பார்ப்பனர்களின் இயல்புகள் அப்படியே சங்கரர் காலம் தொடங்கி மறையாமல் - மறவாமல் தொடர்ந்து வருகின்ற உண்மையை உலகியலில் கண்டு பெரியார் எழுதியுள்ளதையும் பாருங்கள். இத்தகைய கொடியவர்களையெல்லாம் தமிழர்கள் என்றும், அவர்கள் எழுதிய வடமொழி நூல்களெல்லாம் தமிழருக்குரியவை என்றும் கண்ணை மூடிக்கொண்டு - வரிந்து கட்டிக்கொண்டு எழுதியும்,

பேசியும் வரும் பொள்ளாச்சியாரையும் பாருங்கள். பொள்ளாச்சியார் யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டால் போதும்.

**''இத்தகைய பார்ப்பனர்களின் இயல்புகளைத் தொடர்ந்து தமிழருக்கு அறிவுறுத்தவும், அந்தப் பார்ப்பனர்களுக்குத் துணைபோகும் கோடரிக் காம்புகளை அடையாளம் காட்டவும் தான் பெரியார் விட்டுச் சென்ற கருத்துகளும், அமைப்புகளும் இருக்கின்றன''**

என்பதை எண்ணிப்பாருங்கள்!

வேத வியாசர் வடமொழியில் தேர்ந்து பாரதம் பாடினார்; அவர் 'பிராமணரல்லாதவர்' என்கின்றார் -

('சக்தி' - பக்கம் 8)

வேதவியாசர் எப்படியோ 'பிராமணருக்குத்' தெரியாமல் வடமொழியில் வல்லவராகிவிட்டார். முன்னமே தெரிந்திருந்தால் கொன்றிருப்பார்கள்; அல்லது ஏகலைவனிடம் கட்டை விரலைக் காணிக்கையாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டதைப்போல வேதம் பயின்ற -அல்லது சொன்ன நாக்கை அறுத்துத்தரக் கேட்டுவாங்கியிருப்பார்கள். அவர் படிக்கக்கூடாத வடமொழியைப் படித்த குற்றத்துக்குரிய தண்டனையாகப் பாரதத்தைப் பாடச் செய்து வாங்கிக்கொண்டார்கள்:

ஆதிகாவியம் என்று போற்றப்படும் இராமாயணத்தை வான்மீகி உருவாக்கித் தந்தார். அவரும் 'பிராமணரில்லை'. அவரும் வியாசரைப் போல எப்படியோ பயின்றவர்தான். அவர் வடமொழியைப் பயின்ற குற்றத்துக்காகத் தங்கள் நோக்கத்துக்குப் பொருந்த இராமாயணத்தைப் பாடச் செய்து பார்ப்பனர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

## அம்பேத்கர் கூறிய அருஞ்சொற்கள்:

பாபாசாகேப் அம்பேத்கரே தாம்-இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப் பொறுப்பேற்றுக் கொண்டதைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

''பார்ப்பனர்களுக்குப் பாரதம் வேண்டியிருந்தது. அதற்கொரு வியாசர் வந்தார். இவர் பார்ப்பனரல்லர். பார்ப்பனருக்கு இராமாயணம் வேண்டி இருந்தது. அதற்கு வான்மீகி வந்தார். வான்மீகி பார்ப்பனரல்லர். பார்ப்பனருக்கு இந்திய அரசியல் சட்டம் வேண்டியிருந்தது. அதற்கு நான் வந்தேன்'' என்றார்.

பார்ப்பனர்களின் அறிவு, பாரத இராமாயண காலம் தொடங்கி, நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பயன்படும் சிறந்த காரியங்களை உருவாக்கப் பயன்பட்டதில்லை. பார்ப்பனரல்லாதவர்கள் தான் பயன்படுவார்கள். பார்ப்பனரல்லாதாரை முதலில் பயன்படுத்திக் கொண்டு, அப்படியே கைவிட்டு விடுவார்கள். இதுவும் பாரத இராமாயண காலம் தொடங்கி நடந்துவரும் உண்மையாகும். அம்பேத்கரைப் பயன்படுத்திக்கொண்டு - அப்படியே விட்டு விட்டார்கள்.

அடுத்துச் சில எடுத்துக்காட்டுகள் : காஷ்மீர்ச் சிக்கலில் அய்க்கிய நாட்டுச் சபையில் பேசி நிலைநாட்ட இயலாமல் காஷ்மீர்த் திவானாக இருந்த என். கோபாலசாமி அய்யங்கார் திணறினார். அரசியல் சட்டத்தை உருவாக்கிய குழுவில் இவர் இருந்தார். இவர் அங்குத்திணறினார். அதுகண்ட நேரு சர். ஏ. இராமசாமி (முதலியாரை) அழைத்து அனுப்ப, அவர் வெற்றி வாகை சூடிவந்தார். அத்துடன் அவரைக் கைகழுவி விட்டனர். வல்லபாய் பட்டேல் கவர்னர் பதவி தருகிறேன் என்றார். அது சோம்பலுடையவன் உட்கார்ந்து பொழுது போக்கும் பதவி; செயல்பட ஏற்றதாகக் கொடுங்கள் என்றார், அத்துடன் விட்டுவிட்டனர்.

**ஆர். கே. சண்முகனாருக்கும் அதே கதி**

இந்திய நாடு சுதந்தரம் அடைந்தபோது, ஆங்கில ஆட்சியுடன் உள்ள கணக்கு வழக்குகளை ஒதுக்கித் தீர்த்துக் கொள்வதற்குத் தகுந்த தகுதியும் திறமையும் பார்ப்பனருக்கில்லை. ஆர்.கே. சண்முகம் (செட்டியார்) தான் தீர்த்து வைத்தார். அவரையும் சில காலம் நிதியமைச்சராக வைத்திருந்து பின்னர்க் கைவிட்டுவிட்டனர்.

பார்ப்பனர் படித்தவர்களே தவிர, அவர்கள் அறிவாளிகளல்லர். பார்ப்பனர்களின் நீண்டகால வரலாற்றில் சமுதாயத்துக்கோ, நாட்டுக்கோ பயன்பட்டதாக வரலாறில்லை. பார்ப்பனரல்லாதார் பயன் பட்டிருக்கின்றனர். பார்ப்பனரல்லாதார் திறமைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது பார்ப்பனர் வழக்கம் என்பது தெரிகின்றது.

**அடுத்தும் ஓர் ஆதாரமற்ற உளறல்:**

'வேத சுலோகங்களை மனத்தில் பதியவைத்துக் கொள்ளும் மரபு இருந்த காரணத்தால் - வேதங்களைப் படிப்பது, ஒப்புவிப்பது

ஆகியவற்றில் யார் யார் ஈடுபட்டாலும் அந்தப் பிரிவினர் பிராமணர். ஆனார். வேத வியாசர் பிராமணரல்லர். அவருடைய தாயார் ஒரு செம்படவப் பெண்'.

('சக்தி' - பக்கம் 8)

**பொள்ளாச்சியாருக்கு ஏது உரிமை?**

வழி வழியாகப் பன்னெடுங் காலமாக நடைமுறையில் மேற்கொண்டு வரும் சட்டப்படிக்கான நடைமுறைகளை மாற்றி எழுத இந்தப் பொள்ளாச்சியாருக்கு உரிமை ஏது? வேதாகமச் சுலோகங்களைப் படித்தவர் பார்ப்பனராக முடியாது. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற நிலை பிறவியைத் தொடர்ந்துவருவது. அதனுடைய ஆழம் அழுத்தம் எத்தகையது? கீழ்வரும் சான்றுகளைப் பாருங்கள்.

"Panchama is asked to be at a distance, because of the inborn impurity of his body. Any amount of washing of the body with the best available soap and any clothing and decoration of it in the best upto dated style cannot remove from it its inlaid filth that has orginated from deep rooted contamination of filthing inheridity".

(An Interview with Sirungeri Sankaraachariar by Paul Bruton. A Search of secret India, Page 230)

இதன் தமிழாக்கம்: ''பஞ்சமர்கள் அதாவது தாழ்த்தப்பட்டவர்களை எட்டி நிற்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதற்குக் காரணம், அவர்கள் பிறக்கும்போதே உடன் பிறந்த உடம்பிலுள்ள தீட்டுத்தன்மைதான். உடலுக்குப் போட்டுக் குளிக்கும் எவ்வளவு உயர்ந்த வகையான சோப்புப் போட்டுக் குளித்தாலும் அது போகாது. எந்த உயர்ந்த வகையான உடைகளைத் தற்கால நாகரிகத்திற்குப் பொருந்த உடுத்திக்கொண்டாலும், அந்தத் தீட்டுப் போகாது. தலைமுறை தலைமுறையாக வேரூன்றி உருக்கொண்டு வரும் தூய்மையில்லாத தன்மையுடன் கூடிய அந்தத் தீட்டு மற்காட்டிய எவற்றாலும் போக்க முடியாததாக இருக்கின்றது''

சாதி வேறுபாடு என்பது ார்ப்பனர் கருத்துப்படி எவ்வளவு ஆழமானது என்பதைப் பார்ப்பனர்களின் தலைவர் சங்கராச்சாரியார் கூறியுள்ளதைப் பாருங்கள். அது பிறவியோடு தொடர்ந்து வருவது என்பது இவர் கருத்து என்பது தெரிகின்றது. படிப்பால் போய்விடும்

என்கின்றாரே! அது போகாது என்பதற்கு மேலும் கண்கூடான சான்றுகள் சிலவற்றைக் காட்டுகின்றேன்.

ஆனானப்பட்ட பாபுஜியே அவமானமடைந்தாரே!

அண்மையில் காலஞ்சென்ற பாபு ஜெகஜீவன்ராம் என்பவர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெரிய மனிதர். இந்திய மத்திய அமைச்சரவையில் மிகப் பல ஆண்டுகள் முதல் வரிசையில் உள்ள அமைச்சராக (Cabinet Minister) இருந்தவர். தற்காலக் கல்வித்துறைகளைக் கற்றுத் துறைபோயவர். இவற்றோடு சமஸ்கிருதத் தையும் கற்றறிந்த மேதை. இவரைப் பார்ப்பனராக்கினார்களா? பார்ப்பனராக்க வேண்டாம்; பிரதமர் ஆக்கினார்களா? அதுவும் வேண்டாம். மனிதரை மனிதராக மதிக்கவேண்டும் என்ற பெரிய மனத்துடன் நடந்து கொண்டார்களா? அதுவும் இல்லை. அவமானப்படுத்தினார்கள். இதுபற்றி இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

24-1-1978-இல் வாரணாசி சமஸ்கிருதப் பல்கலைக் கழகத்தில், அதர்வண வேதப் பதிப்பாசிரியரான சம்பூரணானந்த் என்பவரின் சலவை க் கல்லால் செய்த சிலையைத் திறந்து வைக்கப் பாபுஜியை அழைத்தனர். அவரும் போயிருந்தார். அப்போது பாபு ஜெகஜீவன்ராம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சர். தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை எல்லாம் அவர் ஆணைப்படி நடக்கும். இந்திரா கட்சியின் மாணவர் பிரிவான சத்ர சங்கத்தார், அவர் போகும் வழியில் கூட்டமாக நின்றுகொண்டு கண்டபடி ஏசினர்; பேசினர்; அத்துடன் நில்லாது, அவர் சென்றபிறகு கங்கைநீரைக் கொண்டு வந்து சிலையின் மேல் ஊற்றித் தீட்டைப் போக்கினார்கள். இதனைக் கண்டித்து ராம் தான் என்னும் தாழ்த்தப்பட்டோர் லீகின் தலைவரான எம்.பி. அறிக்கை விட்டார். ஒரு நடவடிக்கையும் இல்லை.

அடுத்தும் ஒரு சான்று காட்டுகின்றேன்.

மண்டல் குழு அறிக்கையின் முதற்பகுதி பக்கம் 46-இல் ஒரு செய்தி காணப்படுகின்றது.

**மவுன்ட்பாட்டனுக்கு அனுமதிப்பு;**
**டாக்டர் அம்பேத்கருக்கு அவமதிப்பு,**

மண்டல் குழுவின் முன் சாட்சியம் சொன்ன பேராசிரியர் மதுதாண்டவதே இச் செய்தியைச் சொல்லியுள்ளார்.

பூரிசெகந்நாதர் கோயிலுக்கு லார்டு மவுன்ட்பாட்டனை அழைத்திருந்தனர். அவருடன் டாக்டர் அம்பேத்கர், மவுன்ட்பாட்டனின் நிறைவேற்றுக் கவுன்சில் உறுப்பினர் என்ற முறையில் வந்திருந்தார். ஆனால், கோயில் பூசாரிப் பார்ப்பனர்கள், அம்பேத்கரைக் கோயிலினுள் நுழைய அனுமதிக்கவில்லை. இவ்வளவுக்கும் மவுன்ட்பாட்டன் யார்? வேற்று நாட்டுக்காரர்; பிறமதத்தவர். ஆனால், அம்பேத்கர் அப்போது இந்து மதத்தவர்; உள்நாட்டுக்காரர். மிகப் படித்தவர்; அதற்கேற்ற நடைமுறைகளையெல்லாம் உடையவர்.

பாபாசாகேப் அம்பேத்கர் பற்றி நேரு கூறியவை:

1. Intellectual briliance - அறிவுத்திறன்
2. Erudite scholarship - முதிர்ந்த படிப்பறிவு
3. Deep and wide knowledge - ஆழ்ந்தகன்ற தெளிவு
4. Keen inteligence - நுண்ணறிவுக் கூர்மை
5. Sound common sense - தரமான நடப்பறிவு
6. Rich experience - வளமான பட்டறிவு
7. Clear reason - தெளிந்த பகுத்தறிவு

-இவ்வளவும் உடையவர்தாம் பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர். இவர் சமஸ்கிருதமும் படித்திருந்தார். எனக்கு அதில் அய்யமில்லை. ஆனால் பார்ப்பனர், கோயிலுள் விடவில்லை.

சமஸ்கிருதம் படித்தவர்களெல்லாம் 'பிராமணர்களாய்' விடுகிறார்கள் என்று கூறும் பொள்ளாச்சியாரே! இவைகட்கு உங்கள் விடை என்ன?

சமஸ்கிருதம் தமிழனுடைய மொழி என்கின்றார்.

**('சக்தி' பக்கம் -7)**

சமஸ்கிருதத்தைப் பற்றிக் கலைக் களஞ்சியம் (தொகுதி 4; பக்கம் 458-இல்) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''சமஸ்கிருதம் இந்தியாவின் முதுமொழிகளுள் ஒன்று! இது மக்களிடையே பேச்சு வழக்கில் இல்லாமல் போனாலும், புலவர் கூட்டங்களில் பேசப்பட்டே வந்திருக்கின்றது.

தென்னாட்டிலுள்ள திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளைத் தவிர மற்ற, வளர்ச்சி பெற்ற வட இந்திய மொழிகளெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்து வந்தனவே''

## சிவஞான முனிவரின் வரையறை பாரீர்

தென்னாட்டில் திராவிட மொழிகளில் மிகப் பழைமையானதாகிய தமிழ்மொழி, வடமொழியாகிய சமஸ்கிருதத்திற்கு முழுவதும் வேறுபட்ட பழஞ் சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றது. இதனைச் சிவஞான முனிவர், தம்முடைய 'தொல்காப்பியச் சூத்திர விருத்தி' நூலில் மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றார். அவர் வடமொழியையும் தமிழையும் கற்றுத் தெளிந்த பெரும் புலவராவார். அவர் மேற்குறிப்பிட்ட நூலின் பக்கம் 7-இல் பின்வருமாறு எழுதுகின்றார்:

''தமிழ்மொழிப் புணர்ச்சிக்கண்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு - வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை - அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் - புறம் என்னும் பொருள்பாகுபாடுகளும், குறிஞ்சி - வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணங்களும் இன்னோரன்ன பிறவும் வடமொழியில் பெறப்படாதன'' என்கிறார்.

## செத்த மொழிக்கும் - தமிழுக்கும் ஒட்டேது? உறவேது?

தமிழ் மொழியின் பழைய இலக்கண இலக்கிய மரபுகள் பற்றிய சிவஞான முனிவரின் இந்த வரையறுப்பான செய்திகளை எண்ணிப் பாருங்கள். தமிழ் மொழியில் இன்று மிகப் பழைமையுடையதாக விளங்கும் சங்க இலக்கியங்கள் முழுமையும் வடமொழியில் பெறப்படாத - தமிழ் மொழிக்கே உரியதான அகம் - புறம் என்னும் பொருள் பாகுபாட்டமைப்பில் விளங்குவதைக் காணலாம். அகம் என்பது ஆணும் - பெண்ணும் கூடி வாழ்தல் முறையைப் பற்றிப் பேசுவது. புறம் என்பது இதற்குப் புறம்பாக வெளியே நிகழ்த்தும் செயல் முறைகளைக் கூறுவது. நற்றிணை - குறுந்தொகை, அகநானூறு, அய்ங்குறுநூறு , கலித்தொகை போன்ற இலக்கியங்கள் அகம் பற்றிய நூல்களாகும். புறநானூறும்

பதிற்றுப்பத்தும், புறம் பற்றிய நூல்களாகும். தொல்காப்பியம் தமிழ் மொழியில் உள்ள எழுத்திற்கும்- சொல்லிற்கும் முனிவர் சொன்ன அடிப்படையில் இலக்கணங்களைத் தெளிவாக விளக்கிச் சொல்லுகின்றது. இதே தொல்காப்பியம், முனிவர் சொன்ன பொருள்பாகுபாடுகளான அகம் - புறம் பற்றிய இலக்கணங்களையும் திறம்படக் கூறுகின்றது. தொல்காப்பியம் என்ற பழைய இலக்கண நூலுக்கு உரை எழுதிய இளம்பூரணர் - நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர் போன்றவர்களெல்லாம் சங்க இலக்கியங்களையே தொல்காப்பியரின் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளனர். தொல்காப்பிய எழுத்து - சொல் இலக்கணங்களுக்கும், வழக்கத்தில் உள்ள தூய தமிழ்ச் செஞ்சொற்களையே எடுத்துக் காட்டியுள்ளனர். இந்தப் பழைய முறையில் பார்த்தால் வடமொழியாகிய சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும், தமிழர்க்கும் எந்த வகையான ஒட்டும் - உறவும் இல்லை என்பது விளங்கும். இந்த வகையில் எங்கள் ஆசிரியர் சொன்ன உண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக் காட்டுகின்றேன்

## அறியாமை அகற்றிக்கொண்ட வடவர்

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வடமொழிவல்ல புலவர் ஒருவர் வந்தார். அவர் ஒரு குறிக்கோளை எடுத்து வற்புறுத்தும் நோக்கத்தில், இந்தியப் பகுதிகளில் சுற்றி வருவதாகவும், இங்கும் அந்த நோக்கில் வந்துள்ளதாகவும் கூறினார். அவருடைய குறிக்கோள் என்ன என்றால் - இந்தியா என்று சொல்லப்படும் எல்லா நாடுகளிலும் வழங்கும் மொழிகள் வடமொழியான சமஸ்கிருத மொழியின் வழித் தோன்றியவைகளே. இலக்கண - இலக்கிய மரபுகளும் வடமொழி வழியானவைகளே. எழுத்தொலிகளும், சொற்றொடர் அமைப்பு முறைகளும் எல்லாம் வடமொழியைப் பின்பற்றியே அமைந்துள்ளன என்ற குறிக்கோளை உடையவனாக வந்துள்ளேன்.

''நீங்கள் தமிழிலுள்ள இலக்கியப் பாக்களைக் கூறினால் - நான் என்னுடைய குறிக்கோளை அப் பாடல் மூலமாக விளக்கிக் கூறுகின்றேன்'' என்று சொன்னாராம். பல்கலைக் கழகத்தில் அக் காலத்தில் இருந்த அறிஞர்களெல்லாம் வந்து கூடினார்கள். அவர்களில் பூண்டி அரங்கநாத (முதலியாரும்) இருந்தார். இவர் தமிழ், ஆங்கிலம்,

கணக்கு - வரலாறு போன்ற துறைகளில் பெரும் புலமை பெற்றிருந்தார் என்று கூறுகின்றனர்.

அவர் எழுந்து பின்வரும் திருக்கோவையார்ப் பாடலைக் கூறினார்:

''யாழும் எழுதி எழில்முத்தெழுதி இருளின் மென்பூச்
சூழும் எழுதியோர் தொண்டையும் தீட்டியென்
தொல்பிறவி
ஏழும் எழுதா வகை சிதைத்தோன் புலியூர் இளமாம்
போழும் எழுதிற்றோர் கொம்ப ருண்டேல் கொண்டு
போதுகவே''

-வடமொழிப் புலவர் இந்தப் பாடலை இரண்டு மூன்று முறை பாடச் சொல்லிக்கேட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தப் பாட்டு எந்த அடிப்படையில் - என்ன கருத்தைச் சொல்கின்றது என்பது அவர்க்குப் புரியவில்லை. பிறகு அவர் - தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் தன்னுடைய கருத்துத் தவறானது என்று ஒப்புக்கொண்டார் என்று என்னுடைய ஆசிரியர் கூறினார். இதன் உண்மை என்ன?

மேலே சிவஞான முனிவர் அகம்-புறம் பற்றிய பொருள் பாகுபாடு, வடமொழியில் இல்லை என்று சொன்னாரே, அந்த அடிப்படையில் அகம் பற்றிய பாடலாக - அதாவது ஆணும், பெண்ணும் இணைந்து வாழ்தல் பற்றிய ஒரு செய்தியை, இப் பாடல் கூறுகின்றது. அகம் என்ற பெரும் பிரிவு களவு - கற்பு என்று இரண்டு வகைப்படும். களவு என்பது ஆணும், பெண்ணும் ஆகிய இருவரும் வயது வந்த நிலையில், இணைந்து வாழ்தலைத் தமக்குள்ளே பழகி முடிவு செய்வது; கற்பு என்பது அவர்களின் உள்ளக் கிடக்கையை அறிந்து, மணம் முடித்து வாழ் விடுவது. இந்த வகையில் இந்தப் பாடல் களவு பற்றிய பாடலாகும்.

இவ்வாறு இந்தப் பாட்டு முழுவதும் சிவஞான முனிவர் குறிப்பிட்ட அகப்பொருள்பற்றி வந்துள்ளமையால், வடமொழிப் புலவருக்குப் புரியவில்லை. இது மட்டுமல்லாமல் இந்தப் பாட்டில் யாழ் - எழுதி - எழில் - சூழ் - ஏழு - போழ்- என்று ழகர ஒலியைப் பெற்றுள்ள ஆறு தமிழ்ச் செஞ்சொற்கள் வந்துள்ளன. இந்த ழகர ஒலி, வடமொழியில் இல்லாத ஒலி. ஆகவே எழுத்தொலிப்பும், வடமொழியாளருக்குப் புலப்படவில்லை.

## வடமொழியை வெறுத்த தமிழ் மலைகள்

சைவ, வைணவ சமயஞ் சார்ந்த திருநாவுக்கரசர் - நம்மாழ்வார் போன்றவர்கள் அகம் பற்றிய சங்க இலக்கிய மரபுகளைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளனர். பரஞ்சோதி முனிவர் - சிவப்பிரகாசர் - சேக்கிழார் போன்றோர் வடமொழியைத் தமிழினின்றும் வேறுபடுத்திக் குறைத்து மதிப்பிட்டுள்ளனர். தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை என்று கூறப்படும், ஆங்கிலம் - ஆரியம் - தீந்தமிழ் மூன்றிலும் பெரும்புலமை பெற்றிருந்த மறைமலை அடிகளார் - கா. சுப்பிரமணியம் (பிள்ளை), பொறியாளர் பா.வே. மாணிக்கம் (நாயக்கர்) பேராசிரியர் சுந்தரனார், சூரிய நாராயணன் (சாஸ்திரியார்) பண்டித ந.மு. வேங்கடசாமி (நாட்டார்), பண்டித கதிரைவேல் (பிள்ளை), -எம்.ஏ. எம்.எல்., எம்.எஸ். பூரணலிங்கம் (பிள்ளை), மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் - இன்னும் எண்ணற்ற தமிழறிஞர்கள் வடமொழியை வெறுத்து ஒதுக்கியே வந்துள்ளனர்.

## மொழி நூலறிஞர் கருத்து:

வடமொழி, தமிழ் முதலான பல மொழிகளில் சிறந்த பயிற்சியும், புலமையும் உடைய டாக்டர் கால்டுவெல் தமிழ் மொழியின் சிறப்பைத் தம்முடைய ஆய்வு நூலில் பின் வருமாறு கூறுகின்றார்:

''தெலுங்கும், கன்னடமும், மலையாளமும், தத்தம் தனி நிலைகளை நிலைநாட்டுவது அறவே இயலாத அளவு, சமஸ்கிருதச் சொற்களை அளவிற்கு மீறிக் கடன் வாங்கியுள்ளன. அவற்றின் துணையை நோக்கி, எதிர்நோக்கிப் பழகிவிட்டன. ஆதலின் தன்னுடைய சமஸ்கிருதக் கலவைகளைக் கைவிடுவது தெலுங்கு மொழிக்கு இப்பொழுது அரிதாம் என்பது உண்மை. கன்னடத்திற்கு அதனினும் அரிதாம். மலையாளத்திற்கு அவை எல்லாவற்றைக் காட்டிலும் அரிதாம். திராவிட மொழிகள் அனைத்திலும் உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ் தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்''.

(கால்டுவெல் ஒப்பிலக்கணம். புலவர் கா. கோவிந்தன் எம்.ஏ., க. ரத்தினம் எம்.ஏ., மொழி பெயர்ப்பு. பக்கம். 62, 68, 69)

## ஆரிய மொழியாலும் அழியாத தமிழ்

உலகளாவிய தற்காலத்திய மொழியியல் துறையில் (Modern Linguists) பெரும் புலமை சான்றவரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான டாக்டர் அகத்தியலிங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''திராவிட மொழிகள் மிகப் பழைமையான மொழிகள் என்பதும், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்திய நாட்டில் வழக்கிலிருந்து வந்துள்ளன என்பதும் இன்றைய மொழியியலாளர் கொள்கை.

திராவிட மொழிகளில் தமிழ்மொழியைப் பேசும் மக்கள், மிகப் பன்னெடுங்காலமாகவே தங்களுக்கெனச் சிறந்ததொரு இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கி, அதனைக் கட்டிக்காத்து வந்துள்ளனர். மிகப் பழங்காலத்தே ஆரிய மொழியான சமஸ்கிருதத்துடன் தொடர்புகொண்டிருந்த போதிலும் தனக்குரிய தனிப் பண்புகளைப் பேணி வந்திருத்தலை அன்றுமுதல் இன்றுவரையில் காண முடியும்''.

(5 - ஆவது உலகத் தமிழ் மாநாட்டு மலர்க் கட்டுரை தமிழும் உலக மொழிகளும்)

யான் இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் சமஸ்கிருதம் எந்த வகையிலும் தமிழ் மொழியோடு உறவுடைய மொழி அல்ல என்பது தெளிவாகப் புரியும். தமிழுக்கும் தமிழனுக்கும் வேறுபட்டது சமஸ்கிருதம். ஆகவே அது தமிழனுடைய மொழி ஆகாது. தொன்றுதொட்டுவரும் தமிழ்மொழியைவிட ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம் உயர்ந்த மொழியா? வடமொழி பேச்சிழந்து போனதற்குக் காரணம், செயற்கையான அதன் ஒலிப்புமுறைகளும், ஒழுங்குக்கு ஒத்துவராத பால்பகுப்பு முறைகளுமேயாகும். வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் கடுமையைச் சுவாமி விவேகானந்தரே எடுத்துக் கூறியுள்ளார்.

''நான் என் ஆயுள் முழுவதும் சமஸ்கிருத மொழியைப் பயின்று கொண்டிருக்கின்றேன். எனினும் எனக்கே ஒவ்வொரு தடவையும் புதியதாகத் தோன்றுகிறதெனில், சாதாரண மக்களுக்கு அவற்றைப் பயில்வது எவ்வளவு சிரமமாயிருக்கும். எனவே இவ்வெண்ணங்கள் பொது மக்களுடைய சொந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்''.

(விவேகானந்தர் ) இந்தியப் பிரசங்கங்கள் பக்கம் 188 - 184)

வடலூர் இராமலிங்க அடிகளார் பின்வருமாறு சமஸ்கிருதத்தைப் பற்றி எழுதியுள்ளார்.

''இடம்பத்தையும், ஆரவாரத்தையும் பொழுது போக்கையும் உண்டுபண்ணுகின்ற மொழி.. என்று கூறுகின்றார்.

(- வள்ளலார் ஒருமைப்பாடு பக்கம் 284)

மேலும் அம்மொழியைப் பற்றி அடிகளார் எழுதியுள்ளதைப் பாருங்கள்.

''பல நாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகாசிரியர் சந்நிதியில் தாழ்ந்து, சகபாடிகளோடு சூழ்ந்து, சுர - ஒலி பேதங்களைத் தேர்ந்து, உழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும், பாடமானாலும் பாஷ்யம் - டீக்கா, டீக்காடிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள் கொள்ளத் தேடிக் கைவரினும், அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷ்யக்காரர்கள் வியாக்கியான கர்த்தாக்கள் டீக்கா வல்லபர்கள், டீக்கா சூசகர்கள் - முதலிய போதக, உபபோதக ஆசிரியர்கள் கிட்டுவது அருமையினும் அருமையாயிருக்கிற ஆரிய பாஷை''.

(பா. பி. ப. பு. பக்கம் - 9 வள்ளலார் ஒருமைப்பாடு பக்கம் 285)

இப்படி எழுதிய வடலூரார், இத்தகைய ஆரியமொழியாகிய சமஸ்கிருதத்தில் என் மனம் செல்லாமல், எளிய இனிய தமிழ்மொழியில் மனம் செல்லுமாறு பணித்தாயே என்று இறைவனை நோக்கி வேண்டுகிறார். உண்மை இப்படியிருக்க, பொள்ளாச்சியார், வடலூரார் தமிழ் - வடமொழி - ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் போதித்தார் என்று மனம் துணிந்து ஒரு பொய்யைத் தம் கட்டுரையின் 9-ஆம் பக்கத்தில் எழுதியுள்ளார்.

அடுத்து இவரெழுதும் ஒரு கருத்தைப் பார்ப்போம்.

''இந்துக்களுக்கான குறிப்பிடத்தகுந்த கோயில்களே 3000 -த்துக்கும் அதிகமாக உள்ளன. இக் கோயில்களின் நிர்வாகத்திற்கென்றுதான் இந்து அறநிலையத்துறை அமைக்கப்பட்டது. இந்த அமைப்பு முன்பு சுயாட்சி கொண்டதாகவே விளங்கியது.

காலப் போக்கில் கட்சி அரசியலின் ஆட்சி காரணமாக இந்து அறநிலையத்துறையும் சர்க்காரின் இன்னொரு இலாகாவாகவே மாறிவிட்டது. இவ்வாறு மாறியது அரசுக்கும் நல்லதாக இல்லை; ஆலய

நிர்வாகத்திற்கும் நல்லதாக இல்லை. இந்து அறநிலையத்துறை அரசாங்கக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டு அது ஒரு சுயாட்சி அமைப்பாகச் செயல்படவேண்டும். அந்த நல்ல நாளுக்காக நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோமாக!.

('சக்தி' புக்கம் - 4- 5)

பொள்ளாச்சி மகாலிங்கனாரின் மேலேகாட்டிய இந்துக்களின் கோயில்கள் பற்றிய கணிப்பும், அவர் கூறும் முடிவும் எள்ளி நகையாடத்தக்கவையாக உள்ளன. கோயில்களைப் பற்றிய வரலாற்று முறையில் இவர் எந்தக் கருத்தையும் கூறவில்லை. இவையல்லாமலும் அவர் கோயில்களைப் பற்றி இறுதியாகக் கூறும் முடிவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

தமிழ்நாட்டில் கோயில்களைப்பற்றிய கணிப்பு இது.

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள் | - | 5715 |
| பார்ப்பனர் பூசை செய்யும் கோயில்கள் | - | 5151 |
| அல்லாதார் பூசைசெய்யும் கோயில்கள் | - | 564 |
| தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோயில்கள் மட்டும் | - | 1382 |
| அவற்றுள் பார்ப்பனர் பூசை செய்யும் கோயில்கள் | - | 1343 |
| அல்லாதார் பூசை செய்யும் கோயில்கள் | - | 39 |

('விடுதலை' 25-8-1982)

ஆதாரம் : Periyar's thoughts
Esa. Visuvanathan
(பக்கம் 102 அத்தியாயம் - 2)

இவ்வளவு கோயில்களை வைத்துக்கொண்டு ஆண்டுக் கணக்கில், மாதக்கணக்கில், வாரக்கணக்கில், நாள்கணக்கில் விழாக்களை வைத்துக்கொண்டு ஊர்ஊராக அலைந்து திரியும் மனிதக் கூட்டத்தின் வாழ்க்கையில் தங்கள் உழைப்பு ஒன்றால்தான் தாங்கள் முன்னேறமுடியும் என்ற தன்னம்பிக்கையைக் காணமுடியுமா? அளவுக்கு மீறிய மதப்பற்று, அளவுக்கு மீறிய கடவுட்பற்று, அளவுக்கு மீறிய பக்திப் பற்று இவற்றின் ஒட்டுமொத்தமான அடையாளம்தானே இவ்வளவு கோயில்களும்? நாம் குறித்துள்ள இந்தப் பற்றுகள் அவ்வளவும் ஒன்றாய்ச் சேர்ந்து மனித உள்ளத்தில் மண்டியிருக்கும்

தன்னம்பிக்கை என்ற உணர்வை அடியோடு கல்லி எறிந்து விட்டன. எதற்கெடுத்தாலும் கடவுளே நீயே வழிகாட்டு! உன்னையன்றி வேறு துணையில்லை என்று, வானை நோக்கி நின்று, என் செயலால் ஆவது ஒன்றுமில்லை -எல்லாம் நின்னுடைய சித்தம் போல் நடக்கும் என்ற புலம்பல் மொழிகள் இந்தக் கோயில்கள் உள்ள காலம் வரையும் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

'' நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்''

என்ற சமண முனிவரின் வாக்குப்படிக்கான தன்னம்பிக்கையை இந்த மக்கள் பெறுவது எவ்வாறு?

முதன் முதலாக இந்தக் கோயில்களைக் கட்டிய மன்னர் வழியினர் பூண்டோடு முகவரியும் இல்லாமல் அழிந்து போயினர். வரலாற்றுக்காலப் பல்லவர், பாண்டியர், சோழர்-நாயக்கர் போன்ற அரச பரம்பரையினர் அவ்வளவு பேரும் கோயில்களைக் கட்டி அவைகட்குச் செய்ய வேண்டியவற்றையெல்லாம் குறைவறச் செய்து வந்தவர்களே ஆவர். இவர்களுடைய அழிவை இவர்கள் மேற்கொண்டிருந்த பக்தி காப்பாற்றவில்லையே! இந்த மன்னர்களைப்போலவே இந் நாட்டில் வழிவழியாகப் பக்திப் போதைக்கு ஆளான பார்ப்பனரொழிந்த குடிமக்கள் அவ்வளவுபேரும் சமுதாய அளவில் பார்ப்பனருக்கு அடிமையானவர்கள். அந்தந்தக் காலகட்டங்களில் தோன்றிய வேற்றுநாட்டவரான அன்னியரின் ஆளுகைக்கு அரசியலில் மீளா அடிமைகளாயினர். இவை ஒருபுறம் இருக்கட்டும். கோயில்கள் தோன்றிய வரலாற்றைக் கொஞ்சம் பார்ப்போம்.

கோயில்கள் தோன்றியது ஏன்? என்ற ஓர் ஆராய்ச்சி நூலை நமது மதிப்புமிக்க பொதுச்செயலாளர் கி.வீரமணி அவர்கள் எழுதியுள்ளார்கள். அதில் பல உண்மைகள் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளன. நமது இயக்க வெளியீடாக இதுவரையிலும் ஆறு பதிப்புகள் பதிப்பித்து வெளியாகி இருக்கின்றது. கோயில்களைக் கட்டி, அதில் கடவுள் உருவங்களை வைத்து வழிபாடு செய்வதென்பது ஆரியரின் வழியினரான பார்ப்பனருக்கு உரிய முறையன்று என்ற கருத்து அய்யத்திற்கு

இடமில்லாமல் இதில் நிறுவப்பட்டுள்ளதைக் காணலாம். இதற்கு ஆதாரமாகக் ''கோயில்கள் தோன்றியது ஏன்'' என்ற நூலில் பக்கம் 11-இல் இரண்டு எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள்ளன.

''வேதங்களை அடிப்படையாகக் கொண்ட

ஆரிய மதத்தில் விக்ரக ஆராதனை இல்லை.

இது பின்னர்த் தோன்றிய இழிவுபட்ட ஆராதனை முறையாகும் (Degenerated formof worship)

-இவ்வாறு வடமொழியில் பெரிய ஆராய்ச்சியாளரான செர்மானியர் மாக்ஸ் முல்லர் (Max Muller) கூறுகின்றார்.

வங்காளத்துச் சட்ட மேதையாக அவர் காலத்தில் விளங்கிய ஜே.சி. கோஷ் என்பவர் பெரிய சட்டத்துறை நிபுணர். 'தாகூர் சட்ட விரிவுரைகள்' என்ற பெயரில் சட்ட நுணுக்கங்கள் பற்றிய விரிவுரையைச் செய்தவர். நம் நாட்டுக் கா. சுப்பிரமணியம் (பிள்ளை) எம்.ஏ., எம். எல்., அவர்களும் தாகூர் சட்ட விரைவுரை ஆற்றிய பெரிய சட்டத்துறை வல்லுநர். வங்காள அறிஞரான ஜே. சி. கோஷ் என்பவர் தம்முடைய தாகூர் சட்ட விரிவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''மக்கள் யாகங்களை நடத்திக்கொண்டிருந்த காலத்தில் கோயில்களையும் விக்கிரகங்களையும் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பிராமணர்கள் மட்டும் அக்கினியை வளர்க்கலாம். அதனால் அவர்களை அக்னி கோத்திரிகள். என்று அழைத்தார்கள். மற்ற சாதியார் வழிபடத் தெய்வம் வேண்டியிருந்தது. ஆரியர் வருமுன் இந்தியாவில் இருந்தவர்களிடமும், பழங்குடிகளான திராவிடர்களிடமிருந்தும் கடன் வாங்கப்பட்டிருக்கவேண்டும். புத்த மதத்தினர் புத்தரின் உருவச்சிலைகளையும் நினைவுத் தூண்களையும் நிறுவி வழிபட்டனர். புத்தமதத்தினரின் இச்செயல், கோயில்களையும் விக்ரகங்களையும் உருவாக்குவதற்குத் தூண்டுகோலாயிற்று''.

(பக்கம் : 12 'கோயில் தோன்றியது ஏன்?')

இவ்விரண்டு எடுத்துக்காட்டுகளால் கோயில் கட்டி அதில் விக்கிரகங்களை நிறுவி வழிபடல் என்பது ஆரியர்க்கு உரிய முறையன்று என்பது பெறப்பட்டது. புத்தருக்குப் பின்னர் புத்தரின் உருவங்களைப் பல இடங்களிலும் நிறுவி வழிபாடு செய்தனர். மக்கள் இதில் மிக்க

ஆர்வம் காட்டினர். இந்நிகழ்ச்சிகளுக்குப் பின்னர்தான் கோயில்கள் உருவாயின என்பது பெறப்படுகின்றது.

இன்னொரு எடுத்துக்காட்டை நமது பொதுச் செயலாளர் குறிப்பிடுகின்றார். ஆரியர்களின் மனுநீதி ஆகமங்கள் தோன்றுதற்கு முன்னர் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் தோன்றிவிட்டது. அதில் கோயில் தோற்றுவிக்கவேண்டிய கட்டாயத்தை வற்புறுத்தியிருக்கின்றார். இதனுடைய முக்கியக் குறிக்கோளாக அவர் குறிப்பது அரசனுடைய வருவாய்க்கு இது ஒரு சிறந்த வழியாகும் என்பதுதான். அக்கினி வளர்த்துத் துதி செய்துகொண்டிருந்த அக்கினி கோத்திரங்களில் சிலரும் பலரும் கோயில் நிறுவப்பட்டு வணங்கும் சிலைகட்குப் புரோகிதர்களாக இருந்து நடத்தி வந்தனர். இவர்களை அக்கினி கோத்திரிகள் சாதி விலக்கம் செய்துவைத்தனர் என்று ஜெ. சி. கோஷ் எழுதியுள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேற்காட்டிய எடுத்துக்காட்டால் கோயில்களை அரசனது வருவாய்களில் ஒன்றாக உருவாக்கினர் என்பதும் பெறப்படுகின்றது. மேலும் இந்தக் கோயில்கள் தொடர்ந்து எல்லா அரசுகளுக்கும் நல்ல வருவாயைத் தேடித்தரும் ஓர் இடமாக இருந்ததால், அவரவர்களும் கோயில்களைப் பேணிப்பாதுகாத்து வந்தனர் என்பதும் பெறப்படுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் பல மதங்களின் கோயில் வருவாய்களை ஆளுகின்றவர்கள் என்ற முறையில் ஆங்கில அரசும் அதனை அடைந்து வந்துள்ளதை அறிகின்றோம். இச் செய்தியை இலண்டன் பிரிவி கவுன்சில் நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''1810-இல் வங்காள மாகாணத்திலும் 1817-இல் சென்னை மாகாணத்திலும் சகல இந்து, மகமதிய பொதுஸ்தாபனங்களையும் தர்மங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியினர் தங்கள் ஆதீனத்தில் எடுத்து அவற்றைத் தங்கள் ரெவின்யூ போர்டாரிடம் ஒப்படைத்தார்கள்''.

கோயில் வருமானமெல்லாம் அரசாங்கத்தைச் சேர்ந்தது. இம் முறையானது பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு முன்னிருந்த இந்து முஸ்லீம் அரசாங்கங்களிலிருந்து கிடைத்த பாரம்பரியமாகும் (Legacy). இவ்வாறு நல்ல வருவாய் கிடைத்த காரணத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 1843-ஆம் ஆண்டு வரை தமது கலெக்டர், தாசில்தார் இவர்கள் மூலமாகக் கோயில் காரியங்களை மிக நுணுக்கமாக மேற்பார்த்து வந்தார்கள் என்ற செய்தி தக்க ஆதாரங்கள் மூலம் தெரிகின்றது. இதற்குப் பிறகு ஒரு பெரிய

மாற்றம் ஏற்பட்டது. இவ்வாறு அரசு நடந்துகொள்ளுவது தவறானது என்று இங்குள்ளார் எவரும் மறுப்புரைக்கவில்லை.

ஆங்கிலேயருக்கு முன்னர் ஆண்ட இந்து - முகமதியர் முதலான அரசுகள் கோயில் வருவாயைத் தங்கள் அரசுக்குரியதாகக்கொண்டு ஆண்டதுபோல, ஆங்கிலேயர்களும் தங்கள் அரசுக்கு வருவாயாக எடுத்துக்கொண்டார்கள் என்று எண்ணி எந்த மறுப்பையும் எவரும் கூறவில்லை. மேலும் ஒரு கருத்தை இங்கு எண்ண வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம் நாட்டில் எவ்வளவு கொடிய அரசர்கள் தோன்றி மிகக் கொடுமையான முறையில் ஆட்சி நடத்தினாலும், அரசர்களைக் குடிமக்கள் எதிர்த்தார்கள் என்ற பேச்சுக்கு இடமே இல்லை. அரசியலில் உரிமையை வேண்டிக் குடி மக்கள் எதிர்க்கவேண்டும்; புரட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் நம் நாட்டு மக்களிடம் என்றும் இருந்ததில்லை. இந்திய நாட்டு அரசியலிலும் இவ்வாறு காணமுடியாது. இதற்குக் காரணம் அரசனை மக்களுள் ஒருவனாக எண்ணுகின்ற எண்ணம் நம் நாட்டு மக்களிடம் என்றும் இருந்ததில்லை; அரசனை இறைவனின் அவதாரமாகவே எண்ணினார்கள்.

'திருவுடைய மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே'

**(திருவாய் மொழி - 4-4-8)**

என நம்மாழ்வார் பாடியுள்ளமையால், இந் நாட்டு மக்கள் மன நிலை நன்கு புரிகின்றது. சில பல சொற்களை மக்கள் கையாளும் பேச்சுவழக்கும் யான் சுட்டிய கருத்தை நன்கு வலியுறுத்துகின்றது. இறை-இறைவன் என்பன கடவுளுக்குரிய பெயர்கள். இச் சொற்களே மன்னவனையும் குறிக்கும். ''இறைமாட்சி'' மன்னவன் மாட்சிமைகள்.

கோயில் - என்பது கடவுள் இருக்குமிடத்திற்குப் பெயர். மன்னவன் வாழும் இடத்திற்கும் கோயில் என்ற பெயர் உண்டு.

''மறத்துறை மண்டிய மன்னவன் கோயில்'' என்று மன்னவன் தங்கியுள்ள இடத்தைக் கோயில் என்று சிலப்பதிகாரம் குறிப்பதைக் காணலாம்.

ஆகவே ஆங்கில ஆட்சியாளர் 1810-இல் வங்காள மாகாணத்திலும் 1817-இல் சென்னை மாகாணத்திலும் தங்கள் அரசுக்கு உரியதாகக் கோயில் வருவாய்களை ஆக்கிக் கொண்டபோது, யாரும் எதிர்க்கவில்லை. 1843-ஆம் ஆண்டு வரையிலும் இந்து மகமதியக்

கோயில் வருவாய்களில் அந்தந்த நிறுவனங்கட்குள்ள செலவுகளைச் செய்தது போக மீதமுள்ள அவ்வளவு வருவாய்களையும் ஆங்கில அரசாங்கமே அடைந்து வந்தது. இவ்வாறு ஆங்கிலேய அரசாங்கத்தார் ரெவின்யூ போர்டார் மூலமாக ஆளுவதைப் பலர் எதிர்த்தார்கள். எதிர்த்தவர்கள் இந்த நாட்டிற்குரிய இந்துக்களோ முகமதியர்களோ இல்லை. தங்களுடைய ஆகம விதிகள் - மத உரிமை வழிபாட்டுரிமை போன்றவற்றை எடுத்துக்காட்டி யாரும் வற்புறுத்தவில்லை. பின்னர் எதிர்த்தவர்கள் யார் என்பதைத் திரு. ஜே. சி. கோஷ் அவர்களே குறித்துள்ளார்கள் என்று நமது பொதுச்செயலாளர் 'கோயில் தோன்றியது ஏன்?' என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

''பிரிட்டிஷ் கவர்ன்மென்டார், அஞ்ஞானிகளின் கோயில்களைத் தங்கள் கையில் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கிறித்துவ மதத்தைச் சேர்ந்த பாதிரிமார்கள் கடுமையாக எதிர்த்தனர்''.

(பக்கம் -26 **''கோயில் தோன்றியது ஏன்?''**)

பாதிரிமார்களின் இந்த எதிர்ப்பால் ஆங்கில அரசு 1814-இல் கலெக்டர்களுக்குக் கோயில் மத நிறுவனங்களை ஆளும் பொறுப்பை யார் யாரிடம் ஒப்படைக்கலாமென்று அறிக்கை அனுப்பக் கேட்டுப் பெற்றனர். அந்த அறிக்கையில் தேவஸ்தானக் கமிட்டி-டிரஸ்டிகளிடம் ஒப்படைக்கலாமென்று கலெக்டர்கள் குறித்திருந்தனர். அவ்வண்ணமே ஆங்கில அரசு அவர்களிடம் ஒப்படைத்தது.

இதற்குப் பிறகு பார்ப்பனப் புரோகிதர்கள் தங்கள் விருப்பம்போல் விதிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு தங்களுடையதாக்கிக் கொண்டனர். 1843-லிருந்து சட்டப்படிக்கான இந்த மாற்றம் ஏற்பட்டதாக அறிகின்றோம். இதற்குப் பிறகு ஆங்கிலேயரிடமிருந்த போது வாய் மூடிக் கிடந்த புரோகிதர்கள் தங்களுக்குள்ளேயே கமிட்டி-டிரஸ்டி போன்றவற்றை அமைத்துக்கொண்டு கோயில் மத நிறுவனங்களின் வருவாய் முழுவதையும் தாங்களே அடைந்து வந்தனர். இதனுடைய உச்சகட்டம் எப்படி முடிந்தது என்பதை நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த தோழர் பரமசிவம் என்பவர் தாமெழுதிய ''நீதிக் கட்சியின் தோற்றமும் வரலாறும்'' என்ற நூலின் பக்கம் 24-இல் பின்வருமாறு எழுதுகின்றார்.

"கோயிலுக்குள்ளே என்னென்ன நகைகள் இருக்கின்றன? இந்த மடாலயத்துக்கு எவ்வளவு சொத்து? இந்தச் சாமிக்கு இருந்த வைரமுடிகள் எத்தனை? என்றெல்லாம் கேட்கமுடியாத காலம்.

இராமச்சந்திர தீட்சதர், மகளின் மூக்கிலே வலப் பக்கம் மின்னுவது பெரியகோயில் அம்மனுக்குப் பஞ்சாட்சரம் செட்டியார் செய்துபோட்ட வைர மூக்குத்தியே என்று தெரிந்தாலும் கேட்க முடியாத காலம்.

ரங்கநாத பட்டாச்சாரியார் அவர் பையனை இலண்டனுக்கு அனுப்பி அய்.சி.எஸ். பரிட்சை எழுதச் சொல்ல ஏதையா பணம்? எல்லாம் ஆண்டவன் கணக்கிலே-வரவு செலவுத் திட்டத்திலே தான் நடக்கின்றது என்று தனித் தனியே கேள்வி கேட்டுப் பதில் கூறிக்கொண்ட காலம்!

பனகல் அரசர் சட்டம் கொண்டுவந்தார். கோயில் பட்டர்களின் அனுபவிப்பில் பேரிடி விழுந்தாலும் பரம்பரை பரம்பரையாக யாருக்குமே கணக்குக் கொடுக்காமல் மூடிவைக்கப்பட்டிருந்த கோயில் சொத்துகள் - லாபங்கள் பொதுப் பார்வைக்கு வந்தன. பார்ப்பனர்களின் சூது நிறைந்த வாழ்க்கையின் அடித்தளம் உடைந்தது.

**('நீதிக்கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்' பக்கம் -24)**

நீதிக்கட்சியின் ஆட்சியில் 1926-இல் பனகல் அரசர் .இந்து அற நிலையத்துறைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதுதான் தமிழ்நாட்டரசின் ஆட்சிக்குட்பட்டு இயங்கும் .இந்து அறநிலையத் துறை. ஆகும்.

"Hindu Religious Endowment Board" ஆகும். யான் முன்னர்க் குறித்த 1843-ஆம் ஆண்டு தொடங்கி 1925-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் பார்ப்பனப் புரோகிதர்கள் கோயில் வருவாய் முழுவதையும் தங்களுடையதாக ஆக்கிக்கொண்ட காலம். இந்தக் கால நிலைமை எப்படியிருந்தது என்பதைத் தோழர் 'பரமசிவம்' (நீதிக்கட்சியின் பொதுச்செயலாளர்) எழுதிய எழுத்துத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இந்து அறநிலையத் துறை என்பது கோயிலுக்கு வழக்கப்படி நடக்கும் எந்தக் காரியங்களையும் நடத்தத் தடையாக இருக்கவில்லை. ஆனால் புரோகிதர்கள் வருமானங்கள் முழுவதையும் தங்களுக்குரியதாக ஆக்கிக்கொண்டதை ஆக்க முடியாமல் செய்துவிட்டது. அந்தத் தொகையைக் கொண்டு பள்ளிக்கூடங்கள் - கல்லூரிகள்- மருத்துவ சாலைகள் பக்தர்களுக்கான வசதிகள்

போன்றவற்றை உருவாக்கி நடத்தி வருகின்றனர். இதிலுள்ள நன்மை கருதிக் காங்கிரசார் தங்கள் ஆட்சிக் காலத்திலும் மாற்றவில்லை.

பொள்ளாச்சியார் இப்போதுள்ள முறையை மாற்ற வேண்டுமென்கின்றாரே! மறுபடியும் கோயில் வருவாய்கள் - சொத்துகள், முழுமையையும் புரோகிதர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்று கூறுகின்றாரே. இந்தக் கொடுமையை என்னென்று கூறுவது?

இப்படி இன்னும் இவர் எழுதியுள்ள கருத்துகளுக்கு மறுப்பு எழுதிக்கொண்டே போகலாம். தலைமையான கருத்துகள் தக்க காரணங்கள் காட்டி மறுக்கப்பட்டன. சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக்குவது பற்றிய கருத்தை மட்டும் விளக்கி இக் கட்டுரையை முடிப்போம்.

சர்.சி. பி. இராமசாமி அய்யர், ஆட்சி மொழியாக இந்தியாவுக்கு சமஸ்கிருதம்தான் இருக்கமுடியும் என்றார். ஆச்சாரியார் லயோலா கல்லூரியில் பேசும்போது, 'இந்தியைப் புகுத்துவதன் நோக்கம் சமஸ்கிருதத்தைப் புகுத்துவதுதான்' என்று கூறினார்.

எழுபது கோடி மக்களுள்ள இந்திய நாட்டில் சமஸ்கிருதம் பேசுவோர் தொகை 500-க்கும் குறைவு என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இந்த அய்ந்நூறு பேரும் சமஸ்கிருதத்தையே பேசிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறமுடியாது. பேசிக் கொண்டிருப்பதாகக் கூறியிருப்பார்கள். அப்படியிருக்கவும், இந்தச் சமஸ்கிருத மொழியை அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளுள் ஒன்றாகச் செய்திருக்கின்றார்கள். அதற்குக் காரணம் அரசியல் சட்டத்தை ஆக்கிய குழுவினர் அறுவர். இந்த அறுவரில் நால்வர் பார்ப்பனர்; ஒருவர் முகம்மது சாதுல்லா என்ற முகமதியர். இன்னொருவர் டாக்டர் அம்பேத்கர். மற்ற நால்வரும் பார்ப்பனர்களே. இப்படிப் பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தை ஆதரிப்பதன் நோக்கம் என்ன என்பதைப் பெரியார் 15-2-1960 'விடுதலை' இதழில் பின்வருமாறு எழுதுகின்றார்:

''சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும்: சுரண்ட முடியும்; நம்மைக் கீழ்ச்சாதி மக்களாக ஆக்க முடியும். அவன் 'பிராமணனாக' இருக்க முடியும். சமஸ்கிருதத்தின் நலிவு-பார்ப்பன

ஆதிக்கத்தின் நலிவு. அதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வசாக்கிரதையாகக் காரியம் ஆற்றுகின்றார்.

('விடுதலை' - 15-2-1960)

தந்தை பெரியார் சொல்லியுள்ள எந்தக் கருத்தையும் யாரும் ஒதுக்கிவிட முடியாது. உலகம் தழுவிய அய்க்கிய நாட்டுச் சங்கத்தின் கல்வி அறிவியல் பண்பாட்டுப் பிரிவு பெரியாரைப் பாராட்டி விருது வழங்கி இருக்கின்றது. பெரியார் காலத்தில் இப்படிப்பட்ட விருதை வேறு எவரும் பெறவில்லை.

## அய்யாவைப் புரிந்த அமெரிக்கப் பேராசிரியர்

'ஆனந்த விகடனில் மணியன் இருந்தபோது, அமெரிக்காவுக்குச் சென்றார். பேராசிரியர் ஜான்ரைலியைப் பேட்டி கண்டார். இவரைப் பேட்டி கண்ட ஆசிரியர் மணியன்- இந்தியாவைப்பற்றிய அவர் கருத்தைக் கேட்டார். இந்தியாவைப் பற்றிக் கூற அவரை ஏன் பேட்டி கண்டார் என்றால் - அதற்குக் காரணம் உண்டு. இந்த ஜான்ரைலி என்னும் பேராசிரியர் இந்திய கலாச்சாரம் சமூக இயல் - குடும்ப இயல், கல்வி முறை, கலைத்துறை ஆகியவற்றைப் பாடத் திட்டங்களில் புகுத்துவதற்கென்றே அமெரிக்காவில் நிறுவப்பட்டுள்ள கல்வி இயல் வளர்ச்சித் துறையைச் சேர்ந்த நிபுணர் (Development of Asian Studies).

ஆசிரியர் மணியன் எதிர்பாராத கீழ்வரும் கருத்தை திரு. ரைலி கூறினார். அது என்ன?

''இந்தியாவில் இரண்டாயிரம் வருடத்தில் மகத்தான ஒரு சமுதாயப் புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கின்றது. திராவிடர் கழகத்தலைவர் பெரியார்தாம் அந்தப் புரட்சியைச் செய்தவர் என்றார்''.

இந்தக் கருத்தை அவரிடம் ஆசிரியர் மணியன் எதிர்பார்க்கவில்லை. ஆகவே திருப்பி அவரைக் கேட்டார்! 'இது உங்கள் கருத்தா' என்றார். அதற்கு அந்தப் பேராசிரியர் என் கருத்து மட்டுமன்று; அமெரிக்காவில் உள்ள மூத்த பேராசிரியர்களின் கருத்தும் இதுவே என்றார்.

இந்த அருமையான நிகழ்ச்சியை ஆசிரியர் மணியன் அவர்கள் 16-7-1972 'ஆனந்த விகடன்' இதழில் வெளியிட்டுள்ளார். இதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதற்கும் காரணம் உண்டு.

ஆனந்த விகடனை நிறுவிய பெரியவர் - திரு வாசன் அவர்கள் தந்தை பெரியாரிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர். திரு வாசன் அவர்களைப் பெரியார் தம்முடைய மூத்த பிள்ளையாகக் கூறுவார் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன்

நம் மதிப்புமிக்க பொதுச்செயலாளர் கி. வீரமணி அவர்கள் அடிக்கடி கூறுவார்:

பெரியாரின் 'மண்டைச் சுரப்பை உலகு தொழும்'.

-என்று புரட்சிக் கவிஞர் பாடிய அடியைக் குறிப்பிடுவார். ஆகவே பெரியாரின் ஒவ்வொரு கருத்தும் எவரும் எக்காரணம் கொண்டும் தள்ளிவிட முடியாதபடி உலகம் தழுவிய ஒப்புதலைப் பெற்று ஒளி விட்டு இன்று விளங்குகின்றது. இன்றென்ன? என்றும் ஒளிவிட்டு விளங்கும் இகழ்ச்சிக்குரியவரே! எமது எச்சரிக்கை!

இத்தகைய பெரியாரின் கருத்துக்கு நேர்மாறாக, நூற்றுக்குத் தொண்ணூற்று ஏழு பேராக இந்தியப் பெரு நிலப்பரப்பு முழுமையிலும் வாழும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட அவ்வளவு மக்கள் மீதும் பார்ப்பன ஆதிக்கம் என்றும் நிலைத்திருக்கச் சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக ஆக்கவேண்டுமென்று ஊரறிய-நாடறிய-உலகறியத் தம்முடைய 'சக்தி' இதழ் மூலமாக எழுதி வெளிப்படுத்தியுள்ள கோடரிக்காம்பான பச்சைத்துரோகச் செயலுக்கு இந்த உலகத்தில் உவமையே இல்லை. பொள்ளாச்சி மகாலிங்கம் பிறந்த கொங்கு நாட்டில்தான் பெரியாரும் பிறந்தார். அவர் தம்முடைய வாழ்நாளெல்லாம் இந்தியப் பெருநிலப் பரப்பு முழுமையிலும் - அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழும் கோடானுகோடி மக்களுக்காக உழைத்து உலகம் தழுவிய புகழைப் பெற்றார். அதே கொங்கு நாட்டில் பெரியாரைவிடப் பாராட்டத்தக்க பண்பட்ட பழங்குடியில் பிறந்து தம்மின மக்கள் மீது பார்ப்பன ஆதிக்கம் என்றும் நிலைத்திருக்கச் சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக்கும் சட்டம் வேண்டும் என்று எழுதியதன் வாயிலாக உலகம் தழுவிய பெரிய இகழ்ச்சியைப் பொள்ளாச்சியார் பெற்றார். காந்தியடிகளை நினைக்கும் உலகம் நாதூரம் கோட்சேயையும் கூடவே நினைக்கும். அதுபோல இனித் தந்தை பெரியாரை நினைக்கும் உலகம் பொள்ளாச்சியாரை நினைக்கும். பொள்ளாச்சி மகாலிங்கமே! நீங்கள் செய்த இம் மாபெரும் தவறுக்கு உங்கள் வாழ்நாளில் இனி

எஞ்சியிருக்கும் காலமெல்லாம் வாய்விட்டு அழுது புலம்பி இரங்கினாலும் அது ஈடாகாது. பொள்ளாச்சி மகாலிங்கனாரே! இன்னொரு செய்தியையும் சொல்கின்றேன். நீங்கள் பிறந்து வளர்ந்த கொங்குநாட்டில் பிறந்தவர்தாம் புரட்சிப் பாவலர் புலமைப்பித்தனார். அவரைக் கொண்டு உலகம் தழுவிய புகழை ஏந்திய எம் அண்ணலாம் தந்தை பெரியாரின் காவியம் ஒன்றை முத்தமிழ்க் காப்பியமாகப் பாடி வெளிப்படுத்த இருக்கின்றோம். அது உங்கள் கொங்கு நாட்டில் பிறந்து வளர்ந்த சிறப்புடைய மாபெரும் கவிஞர் புலவர் குழந்தை பாடிய இராவண காவியம் போன்றது.

ஆனால் இளங்கோவடிகள் பாடிய சிலப்பதிகாரத்துக்கும் - மேலான முத்தமிழ்க் காப்பியமாக அது விளங்கும். அதில் உலகம் தழுவிய புகழுக்குரிய தந்தை பெரியாருக்கு எதிராக - உலகம் தழுவிய இகழ்ச்சியைப் பெற்ற ஓர் உறுப்பினர் தேவைப்படுகின்றார். அதற்குப் பொருத்தமான மனிதர் நீங்கள்தான் என்று சக்தி. இதழில் உள்ள கட்டுரையைப் படித்தவுடன் நினைத்தேன். உங்கட்கு உறுதியாகச் சொல்லுகின்றேன். நீங்கள் திருந்தாவிட்டால், நிச்சயம் காவியத்தில் இடம்பெற்று விடுவீர்கள். ஆகவே, திருந்திவிடுங்கள் என்று எச்சரிக்க விரும்புகின்றேன்.

✱✱✱✱✱

'நான் என் ஆயுள் முழுவதும் சமஸ்கிருத மொழியைப் பயின்று கொண்டிருக்கின்றேன். எனினும் எனக்கே ஒவ்வொரு தடவையும் புதியதாகத் தோன்றுகிறதெனில், சாதாரண மக்களுக்கு அவற்றைப் பயில்வது எவ்வளவு சிரமமாயிருக்கும். எனவே இவ்வெண்ணங்கள் பொது மக்களுடைய சொந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்''.

**சுவாமி விவேகானந்தர்**

**இந்தியப் பிரசங்கங்கள் பக்கம் 188 - 184**

**இந்நூலின் பக்கம் 22**

''பல நாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகாசிரியர் சந்நிதியில் தாழ்ந்து, சகபாடிகளோடு சூழ்ந்து, சுர - ஒலி பேதங்களைத் தேர்ந்து, உழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும், பாடமானாலும் பாஷ்யம் - டீக்கா, டீக்காடிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள் கொள்ளத் தேடிக் கைவரினும், அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷ்யக்காரர்கள் வியாக்கியான கர்த்தாக்கள் டீக்கா வல்லபர்கள், டீக்கா சூசகர்கள் - முதலிய போதக, உபபோதக ஆசிரியர்கள் கிட்டுவது அருமையினும் அருமையாயிருக்கிற ஆரிய பாஷை''

பா. பி. ப. பு. பக்கம் - 9

வள்ளலார் ஒருமைப்பாடு பக்கம் 285

**இந்நூலின் பக்கம் 28**

''சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும்: சுரண்ட முடியும்; நம்மைக் கீழ்ச்சாதி மக்களாக ஆக்க முடியும். அவன் 'பிராமணனாக' இருக்க முடியும். சமஸ்கிருதத்தின் நலிவு-பார்ப்பன ஆதிக்கத்தின் நலிவு. அதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வசாக்கிரதையாகக் காரியம் ஆற்றுகின்றார்.

**பெரியார், 'விடுதலை' - 15-2-1960**

**இந்நூலின் பக்கம் 28**